


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவகத்தின் சார்பாக நடைபெற்ற உலக இரத்த கொடையாளர் தின விழிப்புணர்வு பேரணியை ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்று (24.06.2016) கொடியசைத்து துவக்கி வைத்தார். ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. வடிவேல் முருகன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 395/2016 நாள்: 24.06.2016

**உலக இரத்த கொடையாளர் தினத்தை முன்னிட்டு, விழிப்புணர்வு பேரணியை கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், இன்று (24.06.2016) கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.**

ஒவ்வொரு ஆண்டும் ஜீன் 14-ம் தேதி உலக இரத்த கொடையாளர் தினமாக அனுசரிக்கப்பட்டு, பொதுமக்களிடம் இரத்ததானம் செய்வதின் அவசியம் குறித்தும், அதனால் ஏற்படும் நன்மைகள் குறித்தும், பல்வேறு விழிப்புணர்வு பணிகள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு அலுவகத்தின் சார்பாக உலக இரத்த கொடையாளர் தின நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இன்று (24.06.2016) நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், நிகழ்ச்சிக்கு தலைமையேற்று, உலக இரத்த கொடையாளர் தின விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

நமது மாவட்டத்தில் உலக இரத்த கொடையாளர் தினவிழாவை முன்னிட்டு, கல்லூரி மாணவ, மாணவியர்கள், பொதுமக்களிடயே இரத்ததானம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்வகையில், இன்று அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் செவிலியர் பயிற்சி மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி துவக்கி வைக்கப்பட்டது. நமது மாவட்டத்தில் ஒரு வருடத்திற்கு 18,000 யூனிட் இரத்தம் தேவைப்படுகிறது. தற்போது 94 முகாம்கள் நடத்தப்பட்டு, 3,735 யூனிட் இரத்தம்தான் சேகரிக்கப்பட்டுள்ளது.

மேலும் அனைத்து இரத்தவங்கிகளிலும் தேவையான அளவு இரத்தம் இருப்பில் வைத்துக் கொள்ள, 18 வயது முதல் 65 வயது வரை அனைவரும் இரத்ததானம் செய்ய முன்வர வேண்டும். குறிப்பாக கர்ப்பிணிப்பெண்களும், பாலுட்டும் தாய்மார்களும் இரத்ததானம் செய்யக் கூடாது என தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து 2015-ம் ஆண்டு பெண்களில் 2 முறை இரத்ததானம் செய்த மரு. ஸ்டெல்லா ஜெனட் என்பவருக்கும், ஆண்களில் தொடர்ந்து 3 முறை இரத்ததானம் செய்த திரு. நாகர்ஜுன் மற்றும் திரு. சுபாஷ் ஆகியோருக்கு பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

பேரணியில் கன்னியாகுமரி அரசு மருத்துவக்கல்லூரி மற்றும் செவிலியர் பயிற்சி மாணவியர்கள், நம்பிக்கை மையம், சுகவாழ்வு மையம், இரத்த வங்கி மற்றும் தொண்டு நிறுவன அமைப்புகளைச் சார்ந்தவர்கள் கலந்து கொண்டனர்.

பேரணியானது ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் துவங்கி, அதே வளாகத்தில் உள்ள இரத்த வங்கி பிரிவிற்கு சென்று நிறைவடைந்தது. பேரணியில் சுமார் 125 பயிற்சி பெறும் செவிலியர்கள், விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியபடி கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு. வடிவேல் முருகன், துணை இயக்குநர் (தொழுநோய்) மரு. கிரிஜா, உறைவிட மருத்துவர் மேரி விஜயா, மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு துறையின் திட்ட மேலாளர் மரு. ஸ்டெல்லா ஜெனட், மருத்துவர்கள் பிரவின், விஜயா, அருள்பிரசாத், ஆறுமுக வேலன், அரசு மருத்துவக்கல்லூரி இரத்த வங்கி மருத்துவ அலுவலர்கள் மரு. கரோலின்கீதா, மரு. ரெதீஸ் உள்ளிட்ட அரசு மருத்துவர்களும், செவிலியர்களும் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.